# எங்கு சுற்றியும் ரங்கனைத் தான் சேவிக்கனும்

அன்பர்களே!

தமிழகத்தில் இப்பழமொழி மிகவும் ப்ரபலமானது.சாதாரண ஒரு மனிதனின் வாயிலிருந்து அனுபவ பூர்வமாக இப்பழமொழி எழுந்தது என்றால்,எத்தனை தூரம் ஸ்ரீரங்கமும் ரங்கனும் மக்களின் வாழ்க்கையில் ஒன்றிப்போய்விட்டனர் என்பது புரியும்.உலகின் மிகப் பெரிய கோயில் ஸ்ரீரங்கம் ஆகும்.

**கோயில் என்றால் என்ன?**

கோ+இல்=கோயில்.அதாவது கோ என்றால் அரசன்.இல் என்றால் வீடு.அரசனின் வீடே கோயில்.இது அரசனின் அரண்மனையைக் குறிக்கும்.அக்காலத்தே ஊரின் நடுவில் அரசனின் அரண்மனைகளும் மாளிகைகளும் அமைக்கப் பெற்றன.எக்காலத்தும்,எச்சூழலிலும் மக்கள் அரசனைச் சென்று காணும்படி எளிமையாக அவை அமைக்கப் பட்டன.

ஆன்மீகமும் பக்திமார்க்கமும் வளர வளர நம் அரசர்கள்,தங்களின் இருப்பிடங்களை இறைவனுக்கு இடமாக்கி மரியாதை செய்தனர்.அரசனுக்கும் அரசனான இறைவனின் வீடு கோயில் ஆனது.அரசனின் மாளிகை சற்று ஒதுங்கியது.குறிப்பாகத் தமிழகத்தில் கோயில்கள் மிகவும் பெரியவை.காரணம் அரசர்கள் சமயத்தின் மூலம் சமூகசேவைகள் புரிந்தனர்.அதற்குக் கோயில்களை இடமாக்கிக் கொண்டனர்.சிறு ஸ்வாமி சிலையினைச் சுற்றி ப்ரம்மாண்டமான கட்டிடங்கள் உண்டாயின.அவை,

*மருத்துவமனைகளாகவும், பள்ளிகளாகவும், சமயக் கல்விக்கூடங்களகவும், கலைக்கூடங்களாகவும், இயற்கைச் சீற்றங்களின் போது மக்களுக்கு அடைக்கலமாகவும், போர்க்காலத்தில் பாதுகாப்பான இடமாகவும், தானியச்சேமிப்புக் களஞ்சியங்களாகவும் நூலகங்களாகவும், அரங்கேற்றமண்டபங்களாகவும் ,ஊருக்கே குடிநீர் வழங்கும் நீர்நிலைகளாகவும் மேலும் பல சமூகத் தொண்டுகள் செய்யுமிடமாகவும் விளங்கின.

*அதனால் தான் ஊருக்கு நடுவில் மாபெரும் கோயில்களை அமைத்தனர்.கோயில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம் என்றும் கூறினர்.

*கோயில் மாநகர் என்று மதுரையும்,
*கோயிலகளின் மாநகர் என்று காஞ்சிபுரமும்,
*கோயில் நகர என்று ஸ்ரீரங்கமும் பெயர் பெற்றன.

**கோயிலே ஊர்------ஊரே கோயில்:**

&. ஸ்ரீரங்கம் ஒரு குட்டித்தீவு.ஒருபுறம் காவிரி,மறுபுறம் கொள்ளிடம் என இரண்டு ஆறுகள் பாய்கின்றன.
&. தீவின் நடுவிலே கருவறைக்குள் ஸ்ரீரங்கன் உள்ளார்.
&. அக்கருவறையைச் சுற்றி ஆறு பெரிய ப்ரகாரங்கள் உள்ளன.
&. இவையே,''சப்த ப்ரகாரங்கள் '' எனப்படும்.
&. இன்றைய ஏழாம்,ஆறாம் மற்றும் ஐந்தாம் ப்ரகாரங்கள் ஸ்ரீரங்க ஊராக விரிந்துள்ளன.
&. ஊரே கோயிலாகவும்,கோயிலே ஊராகவும் மாறியுள்ளது.
&. ஏழு ப்ரகாரங்களுக்கும் ப்வ்வொரு அர்த்தம் உண்டு என்பர் ஆச்சாரியர்கள்.
&.ஒரு காரணம்:உடல்,மனம்,செயல்,பேச்சு,ஆணவம்,கன்மம்,மாயை கடந்து ரங்கன் ஆத்மரூபியாய் உள்ளார்.

இப்போது விஷயத்துக்கு வருவோம்.ஏழு ப்ரகாரங்களில் எங்கு சுற்றினும் கடைசியில் மெதல் ப்ரகாரம் சேற்ந்து ரங்கனையே தொழவேண்டும்.அதாவது மனிதன் வாழ்க்கையில் எத்தனை ஆட்டம் போட்டும்,ஏழு பிறவிகள் அனுபவித்தும்,கடைசியில் எப்படியோ பரம்பொருளான ரங்கனையே சேர வேண்டும் என்ற மாபெரும் தத்துவம் இங்கே உணர்த்தப்படுகிறது.

ஆனால் ஸ்ரீரங்கத்திற்கும் அயோதிக்கும் அபார ஒற்றுமை உள்ளது உங்களுக்குத் தெரியமா?
ஆம்! அயோத்தியில் வாழ்ந்த ரங்கன் புதுஇடத்தில் குடிபுகும் போது ராமனின் ஆலோசனையின் படி ஊரும் கோயிலும் அயோத்தி போல் அமைக்கப்பட்டிருப்பதை ஆங்காங்கே காண,உணர முடிகிறது.அதைத் தான் இனி நாம் பார்க்கப் போகிறோம்.

வெளியூருக்கு மற்றல் ஆகிப் போகும் நாம் முடிந்தவரையில் நமக்குப் பழக்கப்பட்ட வகையில் வீட்டையும் இருப்பிடத்தினையும் அமைத்துக் கொள்கிறோம் அல்லவா?அதைப் போல் தான் தன் குலதெய்வம் சோழதேசத்தில் தங்கிவிட்டதை அறிந்த ராமனும் தம்பிகளும் முறையே ஸ்ரீரங்கம் வந்து சோழ அரசனுக்குக் கோயில் அமைப்பிலும் ஊர் அமைப்பிலும் ஆலோசனை தந்து இருக்க வேண்டும்.

வேறு எக்கோயிலிலும் இல்லாத அளவுக்கு ஸ்ரீரங்கத்தில் பத்துக்கும் மேற்பட்ட ராமன் சன்னிதிகள் உள்ளன.அவை அனைத்தும் மூலஸ்தானத்தை நோக்கியே அமைந்துள்ளன.

வால்மீகி ராமாயணத்தில் கூறப்படும் பல அமைப்புகளும் இந்கே உள்ளன.காலத்தினாலும் பல படையெடுப்புகளாலும் அவை மாறிவிட்டாலும்...ஒரு விஷயத்தில் மட்டும் மாறாமல் ராமாயணக் கூறுகள் முறையே இன்றும் நடைமுறையில் உள்ளன.

அவை தான் நம்பெருமாளின் பூஜாவிதிகள்,அவருக்குச் செய்யும் கர்மாக்கள்,கோயிலில் அனுஷ்ட்டிக்கப்படும் ஐதீகங்கள்.அவை ராமானுஜரால் நெறிப்படுத்தப்பட்டவை.ஆனால் அவை அவரால் வால்மீகி ராமாயணத்தில் இருந்து வகுக்கப் பட்டிருக்கலாம்.அல்லது,அவை பல ரங்கன் விபீஷனனால் கொண்டுவரப் பட்த காலம் முதல் அயோத்தியிலிருந்து வந்த அர்ச்சகர்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கலாம்.

அவற்றைப் படித்து,அறிந்து,உணர்ந்து,தெளிந்து...ஸ்ரீரங்கத்தில் நிதானமாக[?] அனுபவித்தால் நாம் ராமனின் காலத்திற்கே செல்வது உறுதி.ராமாயணம் இன்னும் ஸ்ரீரங்கத்தில் நடந்து கொண்டிருக்கிறது என்றால் மிகையாகாது.அப்படி என்ன தான் அக்கோயிலில் உள்ளது?

தன் குலதெய்வமான ரங்கனாகவே ராமன் வாழ்ந்துள்ளான் என்ற உண்மையினை நாம் உணர வேண்டும்.குலதெய்வம் என்பது நம் வம்சத்தினை அபிவிருத்தி செய்யும்,காக்கும்,வழிநடத்தும்.தசரதனுக்கு ரங்கனே அல்லவா ராமனாகப் பிறந்தான்?ரங்கனின் அம்சங்கள் ராமனா?ராமனின் அம்சங்கள் ரங்கனா?இரண்டு பேரும் ஒன்றுதான் என்பதை இக்கட்டுரையின் முடிவில் நீங்களே உணர்வீர்கள்.

அடிக்கடி தன் ~ராமனை இலங்கையில் இருந்து வந்து பார்க்க முடியாது என்று தான் விபீஷணன் ரங்கனை எடுத்து வந்தான்.ஆனால் வருங்கால பாரதமக்களுக்கு வாழ்க்கையில் வழிகாட்டி, நம் பண்பாட்டினை உயர்த்தவே ரங்கனாம் ராமன் இங்கேயே தங்கிவிட்டான் அல்லவா?

வாருங்கள் தென்னாட்டு அயோத்தியாம் ஸ்ரீரங்கத்துள் சென்று ராமனையும் சீதையையும் காணலாம்.
நன்றி!!!